FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319473

1. District : மாவட்டம் தென்காசி | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கீழ்க்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 02/2026 | Date: நாள் 19.06.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 | Sections பிரிவுகள்: 7(a), 7A
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 18.06.2026
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 10.00 hrs to | Time to : நேரம் வரை 12.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 | Time : நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15I 2994819 | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்துமூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Regional Transsport office, Tenkasi, Vaigai Emission Test centre, KKK Sankar Driving School, ENS Driving School 4 Km North.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.கண்ணன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.பெருமாள்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 09.05.1973 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தென்காசி மாவட்டம். | (g) Address : முகவரி தனிவட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், வட்டாட்சியர் அலுவலகம், தென்காசி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு.N.சரவணபவன், வட்டார போக்குவரத்து அலுவலர், தென்காசி, A-2 திரு.G.அசோக் குமார், மோட்டார் வாகன ஆய்வாளர், (பொறுப்பு), தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகம், A-3 திரு.பீரப்பா, த/பெ முகைதீன் பிச்சை, 166A, அப்துல் கலாம் நகர், தென்காசி, A-4, திரு.R.சுப்பிரமணியன், த/பெ ராமையா, 98/3 கதிரவன் காலனி, செங்கோட்டை, A-5, திரு.K.ரவிகுமார், த/பெ கோட்டை மலையான், 70 முப்புடாதிஅம்மன் கோவில் 3வது தெரு, புளியங்குடி, A-6 திரு.S.கார்த்திக் காந்தி, த/பெ சங்கரநாராயணன், 3CA மேல ஆவணி மூலவீதி தென்காசி, A-7 திரு.ராஜா முகமது, த/பெ நயினார் முகமது, 1405, மதினா நகர், வல்லம், A-8 திரு.A.புன்னைவனம், த/பெ அருணாசல பிள்ளை, 10/196-1, பிள்ளையார்கோவில் தெரு, குணராமநல்லூர், தென்காசி, A-9 திரு.M.நாகூர் மீரான், த/பெ முகைதீன் பாதுஷா, 146, மெயின் ரோடு வல்லம்.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 19.06.2026-ம் தேதி காலை 10.00 மணிக்கு தென்காசி மாவட்ட பொறுப்பு காவல் ஆய்வாளரான விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.R.பூமிநாதன் ஆகிய நான் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக பொறுப்பில் இருக்கும்போது தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தென்காசி தாலுகா, சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திரு.P.கண்ணன் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் ரூ.1,37,800/- செயல்முறை நடவடிக்கை நாள் 18.06.2026-ம் இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P.கண்ணன், த.பெ.பெருமாள், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தென்காசி மாவட்டம், தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்), வட்டாட்சியர் அலுவலகம், தென்காசி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் மாவட்டம், பொறுப்பு: தென்காசி மாவட்டம். அய்யா, பொருள்: தென்காசி மாவட்டம் - போக்குவரத்துத்துறை - தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளில் 18.06.2026-ம் தேதி மதியம் திடீர் இணை ஆய்வு செய்தது - கணக்கில் காட்டப்படாத மற்றும் சந்தேகத்திற்குரிய லஞ்சப்பணம் ரூ.1,37,800/- கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the Investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19.06.2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19.06.2026 at 17.45 hrs.

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R.BOOMINATHAN
Rank: நிலை INSPECTOR OF POLICE.

நான் தற்போது தென்காசி மாவட்டம், தென்காசி தாலுகா, சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியராக டிசம்பர் 2025 முதல் பணிபுரிந்து வருகிறேன். தென்காசி மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் நேற்று (18.06.2026) ஒருநாள் மட்டும் தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக இருந்து வந்தேன். நேற்று காலை சுமார் 09.30 மணியளவில் தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர்கள் வாகன பதிவு, ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல், FC ஆகியவற்றிற்கு வரும் பொதுமக்களிடம் குத்துக்கல்வலசை KKK சங்கர், ENS ஓட்டுநர் பயிற்சி பள்ளி, வைகை ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் புகை பரிசோதனை மையத்தை சேர்ந்தவர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் உரிமையாளர்கள், ஊழியர்கள் மூலம் லஞ்சப்பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், பொறுப்பு தென்காசி அவர்களின் வேண்டுகோளின்படி, நேற்று (18.06.2026) காலை சுமார் 10.30 மணியளவில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்து கொண்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், பொறுப்பு தென்காசி திரு.பூமிநாதன் மற்றும் அவர்களது குழுவினர்களுடன் நேற்று (18.06.2026) காலை சுமார் 11.45 மணியளவில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு, தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் KKK சங்கர், ENS ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் வைகை ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் புகை பரிசோதனை மையம் ஆகியவற்றை நேற்று 18.06.2026-ம் தேதி மதியம் சுமார் 12.05 மணி முதல் இரவு 19.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நின்று கொண்டிருந்த 1) தென்காசி அரசி ஓட்டுநர் பயிற்சிப்பள்ளியில் பணிபுரியும் ஊழியரான தென்காசி, அப்துல்கலாம் நகர், க.எண். 166A-ல் வசித்துவரும் முகைதீன் பிச்சை மகன் திரு.பீரப்பா என்பவரிடமிருந்து ரூ.5000/-, 2) செங்கோட்டை பெல் ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளரான செங்கோட்டை, கதிரவன் காலணி, க.எண். 98/3-ல் வசித்துவரும் ராமையா மகன் திரு.R.சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து ரூ.3,000/-, 3) சந்தேக தனிநபரான புளியங்குடி, முப்புடாதி அம்மன்கோவில் 3வது தெரு, க.எண்.70-ல் வசித்துவரும் கோட்டை மலையான் மகன் திரு.K.ரவிகுமார் என்பவரிடமிருந்து ரூ.3,000/-, 4) தென்காசி KKK சங்கர் ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளரான தென்காசி, மேல ஆவணி மூலவீதி க.எண்.30A-ல் வசித்துவரும் சங்கரநாராயணன் மகன் திரு.S.கார்த்திக்

காந்தி என்பவரிடமிருந்து ரூ.27,800/- என மொத்தம் ரூ.38,800/-மும் மற்றும் 5) தென்காசி குத்துக்கல்வலசை, மதுரை ரோட்டில் உள்ள வைகை வாகன புகை பரிசோதனை மையத்தில் பணியில் இருந்த ஊழியரான செங்கோட்டை, வல்லம், மதினா நகர், க.எண்.1405-ல் வசித்து வரும் நயினார் முகமது மகன் திரு. ராஜா முகமது என்பவரிடமிருந்து ரூ.8,000/-, 6) தென்காசி குத்துக்கல்வலசை, மதுரை ரோட்டில் உள்ள சங்கர் வாகன பயிற்சி பள்ளியிலிருந்த, குணராமநல்லூர் புன்னைவனம் பயிற்சி பள்ளி உரிமையாளரான தென்காசி, குணராமநல்லூர், பிள்ளையார்கோவில் தெரு, க.எண்.10/196-1-ல் வசித்துவரும் அருணாசலம்பிள்ளை மகன் திரு.A.புன்னைவனம் என்பவரிடமிருந்து ரூ.17,400/-, 7) தென்காசி குத்துக்கல்வலசை, மதுரை ரோட்டில் உள்ள ENS வாகன பயிற்சி பள்ளியிலிருந்த அதன் உரிமையாளரான வல்லம் மெயின்ரோடு, க.எண்.146-ல் வசித்துவரும் முகைதீன் பாதுஷா மகன் திரு.M.நாகூர் மீரான் என்பவரிடமிருந்து ரூ.73,600/- என மொத்தம் ரூ.99,000/-மும் ஆகமொத்தம் ரூ.1,37,800/-மும் சம்பந்தப்பட்ட நபர்களால் கணக்கில் காட்டப்பட முடியாத பணம் எனவும், தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர்களுக்கு கொடுக்க கொண்டு வந்த மற்றும் வைத்திருந்த சந்தேகத்திற்குரிய லஞ்சப்பணம் எனவும் கருதி கைப்பற்றப்பட்டது. இதற்கு நேற்று 18.06.2026-ம் தேதி 12.05 மணி முதல் 19.00 மணி வரை ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது.

மேற்படி தனிநபர்களான ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த ரூ.1,37,800/- பணமும் அவர்களால் முறையாக கணக்கில் காட்டப்படாத பணம் என்றும், வாகனம் தொடர்புடைய பணிகளை செய்து தருவதற்காக பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்று தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரியும் திரு.N.சரவண பவன் மற்றும் தென்காசி மோட்டார் வாகன ஆய்வாளராக கூடுதல் பொறுப்பில் பணிபுரியும் திரு.G.அசோக் குமார் ஆகியோர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என்றும் தெரியவந்ததால், திரு.N.சரவண பவன், வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தென்காசி மற்றும் திரு.G.அசோக் குமார், நாகர்கோவில் செயலாக்க பிரிவு, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, கூடுதல் பொறுப்பு, மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தென்காசி, ஓட்டுநர் பயிற்சி பள்ளியின் உரிமையாளர் மற்றும் ஊழியர்களான

தனிநபர்கள் திரு.M.பீரப்பா, திரு.R.சுப்பிரமணியன், திரு.K.ரவிகுமார், திரு.S.கார்த்திக் காந்தி, திரு.ராஜா முகமது, திரு.A.புன்னைவனம் மற்றும் திரு.M.நாகூர் மீரான் ஆகியோர்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் சோதனை செய்தது சம்பந்தமான செயல்முறை நடவடிக்கைகள் நாள்.18.06.2026, திரு.N.சரவண பவன், வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தென்காசி மற்றும் திரு.G.அசோக் குமார், நாகர்கோவில் செயலாக்க பிரிவு, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, கூடுதல் பொறுப்பு. மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தெனகாசி, ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளின் உரிமையாளர் மற்றும் ஊழியர்களான தனிநபர்கள் திரு.M.பீரப்பா, திரு.R.சுப்பிரமணியன், திரு.K.ரவிகுமார், திரு.S.கார்த்திக் காந்தி, திரு.ராஜா முகமது, திரு.A.புன்னைவனம் மற்றும் திரு.M.நாகூர் ஆகியோரது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.1,37,800/-, தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலக பதிவேடுகளான 1) இயக்க பதிவேடு, 2) வருகை பதிவேடு, 3) சிறப்பு பதிவேடு மற்றும் 4) தற்செயல் விடுப்பு பதிவேடு ஆகியவற்றை சமர்பிக்கிறேன். ஓம். P.கண்ணன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தென்காசி மாவட்டம், தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம், வட்டாட்சியர் அலுவலகம், தென்காசி.

Sir, Received the complaint on 19.06.2026 at 10.00 hrs and registered a case in Tenkasi V&AC, Cr.No.02/2026 u/s 7 (a), 7 A of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 on 19.06.2026 at 17.00 hrs Sd.R.Boominathan, 19.06.2026 Inspector of Police, V&AC, Virudhunagar District i/c Tenkasi Dist ict.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tenkasi District and original FIR were sent to the Hon'ble Pricipal District Judge, Tenkasi and copies sent to concerned higher officials.